பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 04 2024 7 15

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் 88 தொகுதிகளில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

2. தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக நாடு முழுவதும் நக்சல் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

3. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் வேளாண் கடன் ரத்து செய்யப்படும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

4. உகாதி, குடிபட்வா புத்தாண்டை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக மகாராஷ்டிரா மட்டுமின்றி நாடு முழுவதும் நக்சல் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மகராஷ்டிர மாநிலத்தில் சந்திரபூர், கட்சிரோலி மக்களவைத் தொகுதியில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

நக்சல் செயல்பாடுகள் நிறைந்திருந்த கட்சிரோலி தற்போது எஃகு தொழிற்சாலை மூலம் வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஒப்பந்தப் பணிமுறை நீக்கப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் சியோனி மற்றும் ஷடோல் பகுதியில் அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றால் விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்றும், அக்னிவீர் திட்டம் ரத்து செய்யப்படும் என்றும் கூறினார்.

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை இரட்டிப்பாக்கப்படும் என்றும் திரு. ராகுல் காந்தி கூறினார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் 88 தொகுதிகளில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தில் புல்தானா, அகோலா, அமராவாதி, வார்தா, எவர்த்மால் - வாஷிம், ஹிங்கோலி, நான்டெட், பார்பனி ஆகிய 8 தொகுதிகளில் மொத்தம் 204 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

கேரளாவில் 194 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அம்மாநிலத்தில் பிஜேபி, காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிக் கூட்டணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

கர்நாடகாவில் தேர்தல் நடைபெறும் 14 தொகுதிகளில் 247 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அதிகபட்சமாக பெங்களூரு தெற்கு தொகுதியில் 29 வேட்பாளர்களும், குறைந்தபட்சமாக தக்ஷின கன்னடா தொகுதியில் 9 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

ராஜஸ்தானில் வாக்குப்திவு நடைபெற உள்ள 13 மக்களவைத் தொகுதிகளில் 152 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அதிகபட்சமாக சிட்டோர்கர் தொகுதியில் 18 வேட்பாளர்களும், ஜல்வார்-பரன் தொகுதியில் 7 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

அசாம் மாநிலத்தில் 5 தொகுதிகளில் 61 வேட்பாளகள் போட்டியிடுகின்றனர்.

உத்தரப்பிரதேசத்தில் 8, மத்தியப்பிரதேசத்தில் 7, மற்றும் பீஹாரில் தலா 5, மேற்குவங்கம், சத்தீஸ்கரில் தலா 3, மணிப்பூர், திரிபுரா, ஜம்மு-கஷ்மீரில் ஒரு தொகுதி உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் இம்மாதம் 26ஆம் தேதி இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராம் அருகே பிஜேபி தலைவர்களில் ஒருவரான திரு. அனுராக் தாக்கூர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நாடு தற்சார்பு என்ற நிலையை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 2014ஆம் ஆண்டில் 7 எய்ம்ஸ் மருத்துவமனைகள் இருந்த நிலையில் தற்போது அதன் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

மக்களவைத் தேர்தல் காரணமாக பிஜேபி தற்போது கச்சத்தீவு குறித்து பேசி வருவதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு கச்சத்தீவை மீட்பதற்கு நீதிமன்றத்தை நாடியதை சுட்டிக்காட்டினார்.

ஆனால் காங்கிரஸ், திமுக ஆகியவை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கடந்த அதிமுக ஆட்சியில் ராமநாதபுரத்திற்கு காவிரி குண்டாறு வைகை இணைப்பு திட்டம் கொண்டுவரப்பட்டாலும் திமுக அரசு அதை நிறுத்தி வைத்துள்ளதாக திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

நாட்டில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மக்களவைத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பிஜேபி தலைமையிலான அரசு பெரு நிறுவனங்களுக்கு உதவும் அரசாக மட்டுமே இருப்பதாக குறை கூறினார்.

83 சதவீத இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பதாகவும், 63 சதவீதம் பேர் மேல்நிலைக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வியைப் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் எந்தவித வளர்ச்சித் திட்டங்களையும் திமுக, அஇஅதிமுக அரசுகள் செயல்படுத்தவில்லை என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

தருமபுரி தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தங்கள் கூட்டணி ஆட்சியமைத்தால் தருமபுரியில் தக்காளி கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் என்.எல்.சி நிறுவனத்தில் தமிழர்களுக்கு மட்டுமே பணி வாய்ப்பு வழங்கப்படும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அருகே பாலக்ரையில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அங்குள்ள பீங்கான் தொழிற்பேட்டை மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

நிதி நெருக்கடிக்கு இடையே திமுக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக அக்கட்சியின் இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், காலை உணவுத் திட்டத்தின் காரணமாக 3 லட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளியில் சேர்ந்துள்ளதாக கூறினார்.

<<<<>>>>

மத்திய அரசு புலனாய்வு அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தி வருவதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி **Sagarika Ghose,** புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசியபோது, மேற்குவங்க மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் மீது தேசிய புலனாய்வு முகமை அமைப்பு தவறான முறையில் விசாரணை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பின்னர் தேர்தல் ஆணைய அலுவலகம் முன்பு தர்ணா செய்த அவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

ஆகாஷ்வாணி மற்றும் டி டி தமிழ் தொலைக்காட்சியில் தேசிய கட்சிகளுக்கும், மாநில கட்சிகளுக்கும் தேர்தல் ஒலிபரப்புக்கான நேர ஒதுக்கீடு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ முன்னிலையில் இன்று நடைபெறவுள்ளது.

சென்னையில் உள்ள டி டி தமிழ் தொலைக்காட்சி வளாகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில், அரசியல் கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

ஆகாஷ்வாணி மற்றும் டி டி தமிழ் தொலைக்காட்சியில் தேர்தல் ஒலிபரப்பு வரும் 12–ஆம் தேதி தொடங்கி, 16–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

<<<<>>>>

உகாதி, குடிபட்வா, சைத்ர சுக்லாடி, சேத்திசந்த், நவ்ரே பண்டிகையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த விழாக்கள் புத்தாண்டையும் வசந்தகாலத்தையும் வரவேற்பதற்காக நடத்தப்படுவதாக கூறியுள்ளார்.

அமைதி, நல்லிணக்கம், சகிப்புத்தன்மை ஆகியவற்றை பரவலாக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்த விழாக்கள் கொண்டாடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இவ்விழாக்கள் பல்வேறு பெயர்களால் கொண்டாடப்பட்டாலும் அதன் மையப் பொருளாக மகிழ்ச்சி என்பது இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வை இது பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சண்டிகர் முல்லன்பூரில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 137 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஷ்ரேயஸ் ஐயர் 34 ரன் எடுத்தார்.

சென்னை அணியின் பந்துவீச்சாளர்கள் ரவீந்திர ஜடேஜா, துஷார் தேஷ்பாண்டே ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினார்கள்.

138 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி 17 புள்ளி 4 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக கேப்டன ருதுராஜ் கெய்க்வாட் 67 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சென்னை அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும், ஜம்ஷெட்பூர் அணி – கோவா அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The end>>>>**